அசல்

3.5.1942. கோவல் தமிழ்ச் சங்கம்.
வடிவேலன்.

அசல் -1

# கோவல் தமிழ்ச் சங்கம்,

## திருக்கோவலூர்.

**திரு. வடிவேல் முதலியார்,**
தலைவர்.

3-5-1942

திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளின்
தலைமையில் 3-5-42 மாலை கூடிய
கோவல் தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் நிறைவேறிய
அனுதாபத் தீர்மானம்

---

சங்க காலத்தில் திகழ்ந்த பேரறிஞர் பலரால் யாக்கப் பெற்றிருந்த பல அரிய செந்தமிழ்க் காப்பியங்கள் உலகிற்குப் பயன்படாது பாவாணர் இல்லங்களின் பரண்மீது கையாளுவாரின்றி மங்கிக் கிடந்தன. அவற்றைத் தேடிப்பிடித்து ஒழுங்குபடுத்தி அச்சிட்டுத் தெளிவுடன் வெளிப்படுத்திய பேருபகாரம் தக்ஷிணாத்திய கலாநிதி. மகாமகோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் அவர்களுக்கே உரித்தானதாகும்.

அத்தகைய மகோபகாரியும் பேரறிஞருமாகிய ஐயரவர்கள் சித்திரபானுவு சித்திரைமீ 16உ யாகிய சென்ற 28-4-42. செவ்வாய்க்கிழமையன்று மாலை மணி 3-15க்குத் தமது எண்பத்தேழாவது வயதில் திருக்கழுக்குன்றத்திலுள்ள திருவாவடுதுறை மடத்தில் திடீரெனக் காலஞ்சென்றதாகக் கேட்டுத் தமிழ் மக்களனைவரும் வருந்தமுறுவார்களென்பதில் ஐயமில்லை. அதுபோலவே திருக்கோவலூர் வாசிகளும், கோவல் தமிழ்ச் சங்க அங்கத்தினர்களுமாகிய நாங்கள் எங்களது ஆழ்ந்த வருத்தத்தை அவர் குடும்பத்தினருக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

எல்லாம் வல்ல ஆண்டவன் திருவருளால் அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுமென அப்பெருமானை வாழ்த்தி வணங்குகிறோம்.

சிவ சண்முக சத்ய ஞான சிவாசாரிய சுவாமி
தலைவர்
ஞானியார் மடாலயம்

தி. வடிவேலன்
தலைவர்
கோவல்தமிழ்ச்சங்கம்.

அசல்

3.5.1942. கோவல் தமிழ்ச் சங்கம்.
வடிவேலன்.

அசல் -1


புத்தகத் தபால்

(8)

பிரம்மஸ்ரீ

கல்யாண சுந்தர ஐயரவர்கள் சமூகம்.

மகாமகோபாத்தியாயர். உ.வே. சாமிநாதஐயரவர்கள்

பேரர்.

திருவாவடுதுறை மடாலயம்

திருக்கழுக்குன்றம்

அசல்

3.5.1942. கோவல் தமிழ்ச் சங்கம்.
வடிவேலன்.

அசல் -1

